# நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், திருவாரூர்

முன்னிலை :- திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை), திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை

**C.C.No. 38/2024**
**CNR No. TNTV13-000220-2024**

தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
காவல்நிலைய குற்ற எண். 919/2021 ................. குற்ற முறையீட்டாளர்

// எதிர்//

செந்தில்குமார் (எ) சுரேஷ், வயது 40/2026,
த/பெ. தனபால்,
குடியானத்தெரு, பெரும்படுகை,
வீதிவிடங்கன். ................. எதிரி

இவ்வழக்கானது 08.03.2024-ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு. தெ. அசோக்குமார், எம்.காம்., பி.எல்., மற்றும் திருமதி. ஆர். ஜீவிதா, பி.காம்., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

**1. அரசுத் தரப்பு வழக்கு :**

குடவாசல் காவல்சரகம், வீதிவிடங்கன் பெரியார் தெருவை சேர்ந்த வாதி ரெகுநாதன் கடந்த 28.08.2021 ம் தேதி மாலை சுமார் 7.30 மணியளவில் வீதிவிடங்கன் கடைத்தெருவில் உள்ள காளிதாஸ் மளிகை கடையில் ஜாமான் வாங்கி கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி சுரேஷ் என்பவர் வாதியை பார்த்து நீ என்ன பெரிய ஆள் மயிறாடா என அசிங்கமாக திட்டி, கட்டையால் வாதியின் நெற்றியில் அடித்தும், வாதியை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்து குற்றச்செயல் புரிந்துள்ளதாக எதிரியின் செய்கையானது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(ii) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று குடவாசல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு BNSS பிரிவு 230-ன் கீழ் குற்ற அறிக்கை மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள் :**

எதிரிக்கு வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்ட பின் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் ஆஜரான பின் குற்றத்தைப் பற்றி வினவ எதிரி குற்றத்தை மறுத்ததன் பெயரிலும், குடவாசல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையை பரிசீலித்தப்பின் BNSS பிரிவு 263(1) -ன் கீழ் எதிரி மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் எதிரிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு, குற்றத்தை ஒப்புக்

கொள்கிறீர்களா அல்லது விசாரணை வேண்டுமா என்று வினவப்பட்டது. எதிரி குற்றத்தை மறுத்தார். அதற்குபின் அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்ப்படுத்த உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சியங்கள்</u> :**

அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.1 ரெகுநாதன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், *" நான் தற்போது வீதிவிடங்கனில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 28.08.2021 ம் தேதியன்று நான் மாலை எங்கள் தெருவில் உள்ள காளிதாஸ் மளிகை கடையில் சாமான்கள் வாங்கி கொண்டிருந்தபோது என்னை அடையாளம் தெரியாத ஒரு நபர் என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், கட்டையால் அடித்து, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது. நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அப்போது போலிசார் என்னிடம் புகார் வாங்கி கொண்டார்கள். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை "* என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 உலகநாதன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " நான் தற்போது திருவாரூரில் வசித்து விவசாய ர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. நான் அன்று ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை "என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 ரவி தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் தற்போது குடவாசல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த திரு. சூர்யா என்பவரின் கையெழுத்தையும், கையொப்பத்தையும் நன்கு அறிவேன். அதன் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.08.2021 ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சொக்கையன் மகன் ரெகுநாதன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று விசாரணைக்கு பின்னர் 02.09.2021 ம் தேதி நிலைய குற்ற எண். 919/2021 சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (அவர் பெற்ற புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). கடந்த 02.09.2021 ம் தேதி சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகளான வீராச்சாமி மற்றும் குமார் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவ உண்மை என்று தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கடந்த 02.09.2021 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு வீதிவிடங்கன் டாஸ்மார்க் கடை அருகே நின்று கொண்டிருந்த எதிரியை அடையாளம் காரணம் கூறி அன்றையதினமே நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவர் சேதுபதி என்பவரை கடந்த 12.09.2021 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் குற்ற இறுதி

அறிக்கை கடந்த 12.09.2021 அன்று தாக்கல் செய்துள்ளார். என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிரான சாட்சியம் பற்றி எதிரியிடம் பிரிவு 351(1) (ஆ)-ன் கீழ் வினவ எதிரி " பொய் சாட்சி " என்று மறுத்து விட்டார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்.

**6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u> :**

எதிரி மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதா? என்பதேயாகும்.

**7. <u>தீர்வு</u> :**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி ஆகியோருடன் சமரசம் ஆகிவிட்டதாக எதிரி தரப்பில் BNSS பிரிவு 359 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், Madan Mohan Abbot v. State of Punjab [2008 SCC 4 - 582] என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கில்,

We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and bereft of the technicalities of the law என்று கூறப்பட்டுள்ள மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை ஏற்று இவ்வழக்கானது தரப்பினர்களுக்கு இடையேயான தனிப்பட்ட பிரச்சனை என்பதோடு தரப்பினர்கள் சமாதானமாகிவிட்டதாக BNSS பிரிவு 359

கீழ் மனு தாக்கல் செய்துள்ளதையும், அரசு தரப்பிற்கு புகார்தாரர் மற்றும் காயம்பட்டவரின் சாட்சியம் ஒத்துழைப்பு அளிக்காது என்பதையும் கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் முடிவு காண்பதே சரியானதாகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பு சாட்சியங்களான புகார்தாரரான அ.சா.1, சம்பவம் குறித்து கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்த வகையில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பு சாட்சியங்கள் யாரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் இந்நீதிமன்றத்தால் அரசு தரப்புக்கு ஆதரவாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

மேலும், இவ்வழக்கில் இதர பட்டியல் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக தற்போதைய குடவாசல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரும் வழக்கு விசாரணை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அவரின் சாட்சியம் மட்டும் எதிரியின் மீதான குற்றத்தை நிரூபிக்க போதுமானதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி தான் இவ்வழக்கின் குற்றச்செயலில் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8. **முடிவாக**, அரசு தரப்பு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் எதிரி மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

Particulars under Rule 106 of Criminal Rules of Practice-2019

| Description of the accused | | | | | | | Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl No. | Name of the Police station and the Cr.No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurence | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence or order | Service of Copy of Judgment an accused |
| 1 | Kodavasal P.S. Cr.No.919/2021 | Senthilkumar @ Suresh | Dhanabal | - | Kudiyana Street, Perumpadugai, Veethividangan | 40/2026 | 28.08.2021 | 02.09.2021 | 02.09.2021 | not applicable | 06.03.2026 | 18.03.2026 | Accused is Acquitted | 18.03.2026 |

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் புதன்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- S. முஹம்மது பாசில்),
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.

**9. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :**

**அ.சா.1** ரெகுநாதன்

**அ.சா.2** உலகநாதன்

**அ.சா.3** ரவி - காவல் உதவி ஆய்வாளர், குடவாசல் காவல்நிலையம்

**10. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :**

**அ.சா.ஆ.1** புகாரில் உள்ள உள்ள அ.சா.1ன் கையொப்பம்

**அ.சா.ஆ.2** புகார் வாக்குமூலம்

**அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ.4** பார்வை மகசர்

**அ.சா.ஆ.5** மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.6** விபத்து பதிவேடு

**அ.சா.ஆ.7** காயச்சான்று

11. **<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

இல்லை

(ஒம்/- S. முஹம்மது பாசில்),
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.

1) வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்து வந்தார்.

**<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.